Rotary



Rtn. HOLGER KNAACK
RI President

கோட்டை முரசு

# KOTTAI MURASU



Rtn. A.L. CHOKKALINGAM
District Governor

RID 3000 GOVERNOR'S MONTHLY LETTER FEBRUARY 2021 | ISSUE-8



## Peace and Conflict Prevention / Resolution Month

# Inside...


| Title | Page |
|---|---|
| From the Editor's Desk | 2 |
| From the pen of the Governor | 3 |
| Message from the First Lady | 3 |
| Polio Workshop | 4 |
| உலக சமாதானம் | 6 |
| ரோட்டரியின் 116வது ஆண்டு விழா | 7 |
| END POLIO NOW | 8 |
| President and Secretary Review Meeting | 9 |
| Governor's Official Visit | 10 |
| New Year and Pongal Celebration | 12 |
| Club Activities - January | 13 |
| Rotaract Club Activities | 14 |
| Advertisement | 15 |
| கொடுத்துச் சிவந்த கரங்கள் | 16 |


# The year so far

| | RID-3000 | RCs in India |
|---|---|---|
| Number of Projects | 1116 | 42,449 |
| Cost of Projects | 1,50,00,815 | 1,58,55,45,382 |
| Man Hours in Service | 1,04,126 | 25,25,697 |

**Top 3 clubs by number of projects**

1. Tiruchirapalli Shakthi - 228
2. Rotary Club of Pudukkottai Maharani - 184
3. Rotary Club of Madurai Gems - 107

**Data as on 31/1/2021 from rotaryindia.org*

**Please update your projects regularly on rotaryindia.org**

## RI Exchange Rate
**Rs. 73 to 1 USD** for February 2021

## From the Editor's Desk



Dear Rotarians,

Greetings to you all! There finally seems to be some light at the end of the COVID tunnel. Vaccinations have begun in earnest. The Government is spearheading the vaccination drive. Rotary is not new to vaccinations. Rotary has been on the vanguard in the drive to end polio through vaccination. However, there seem to be many myths surrounding the COVID vaccination drive. It is also up to us Rotarians to become enlightened about the need for the COVID vaccine and to spread the right information to the public. We cannot afford to play with fire.

February is also the Peace & Conflict Prevention/Resolution Month. We are blessed to live in the southern part of our country that is completely free from armed conflict. However, we must realize that it did not take much for many countries to implode and descend into chaos. The cause of most conflicts tends to be poverty, ethnic tensions, inequality, the lack/unequal distribution of resources, etc. We should educate the youth of our society on such issues to ensure that we can live in peace and enjoy stability.

Wishing you all a happy new year of service,

**Rtn. Dr. Jayson Keerthy Jayabarathan,** M.Tech., Ph.D,
GML Editor.


EDITORIAL TEAM



Rtn. **Dr. Jayson K. Jayabarathan**
Editor



Rtn. **RM. Lakshmanan**
Co-Editor



Rtn. **M. Kumarappan**
Co-Editor



Rtn. **V. Rajendran**
Associate Editor



Rtn. **Alaguraam Jothi**
Associate Editor



Rtn. **Vinitha Mohan**
Associate Editor

# From the pen of the Governor



அன்பின் தூதுவர்களே,

ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினருக்கும் பிப்ரவரி மாதம் 23ம் தேதி மிக முக்கியமான நாள். அன்று தான் ரோட்டரி என்கிற ஆலமரத்தின் விதை ஊன்றப்பட்ட நாள். ரோட்டரி நிறுவன நாள். அந்நாளை, ஒவ்வொரு உறுப்பினரும், ஒவ்வொரு சங்கமும் மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். அந்த நாள் நமது பிறந்த நாளைப் போன்றது. எனவே மிகச்சிறப்பாக அந்நாளை கொண்டாட வேண்டுகிறேன்.

மேலும், நட்பை அடித்தளமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நமது அமைப்பு, உலகில் அமைதியை ஏற்படுத்துவதிலும், கருத்து மோதல்களைத் தடுப்பதிலும் தொடர்ந்து பங்காற்றி வருவது நாம் கவனத்தில் கொள்ளவும், கடைப்பிடிக்க வேண்டியதும் ஆகும். எனவே நாமும், நமது நண்பர்களிடையிலும், சங்கங்களிலும், சங்கங்களுக்கிடையிலும் கருத்து மோதல்கள் ஏற்படாமல், இணக்கமும், நட்பும் நிலவ மிகுந்த அக்கறையுடன் செயல்பட வேண்டுகிறேன். நாம் ஒவ்வொருவரும் அவ்வாறு செயல்படும் போதுதான், உலக அமைதி மற்றும் சமாதானம் குறித்து பேசவும் முயற்சிகள் செய்யவும் உரிமை ஏற்படுகிறது. அன்போடு வாழ்ந்து உலகில் அமைதி நிலவச் செய்வோம்.

அன்புடன்

**Rtn. அ.லெ. சொக்கலிங்கம்**
மாவட்ட ஆளுநர்

# Message from the First Lady



அன்புச் சகோதரிகளே,

பிப்ரவரி மாதம், ரோட்டரி அமைதிக்கான மாதமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. உலகம் என்பது ஒவ்வொரு வீடு மற்றும் வீட்டின் அங்கமான குடும்பங்களின் தொகுப்பாகும். எனவே ஒவ்வொரு வீட்டிலும் அமைதியும் ஒற்றுமையும் நிலவினால் உலகமே அமைதிப் பூங்காவாக பொலிவுறும். குடும்பத்தின் அமைதி என்பது ஒவ்வொரு குடும்ப உறுப்பினரைச் சார்ந்திருந்தாலும், குடும்பத்துப் பெண்களையே கூடுதலாக சார்ந்திருப்பதாக நான் கருதுகிறேன். குடும்பங்களில் பிரச்சனை மற்றும் அமைதியின்மை நிலவும் போது அதைச் சரி செய்யும் பொறுப்பு, ஆற்றல் மற்றும் வாய்ப்பு பெண்களிடமே மிகுதியாக உள்ளது. எனவே நாம் அன்பு விதைகளை விதைத்து உலகில் அமைதி நிலவச் செய்வோம்.

அன்புடன் உங்கள் சகோதரி
**Rtn. சொ. பவானி,**
மாவட்ட முதல் பெண்மணி

| Month | | Club Level | Regional Level |
|---|---|---|---|
| August | ✔ | Rain Water Harvesting | Tree Plantation |
| September | ✔ | One Day RYLA | 32 Happy Schools |
| October | ✔ | Health Kit Distribution | Polio Bus |
| November | ✔ | Vocational Projects | Job Fair |
| December | ✔ | Health Camp | Mega Cardiac Camp |
| February | ✔ | Rotary Information Board | Traffic Awareness |

Club Level Projects : 1st Saturday of the month | Regional Level Projects : 3rd Saturday of the month



# POLIO WORKSHOP & NCD SEMINAR












மதுரை எலைட் ரோட்டரி சங்க விருந்தோம்பலுடன் புத்தாண்டில் ஜனவரி 2ம் நாள் காலை போலியோ மற்றும் தொற்றாநோய் கருத்தரங்கம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. நிகழ்வைத் துவக்கி வைத்துப் பேசிய ஆளுநர் Rtn. A.L. சொக்கலிங்கம் போலியோ ஒழிப்பில் ரோட்டரியின் சீரிய பங்கினை எடுத்துரைத்தும், நன்கொடையாளர்களுக்கு நன்றியும் தெரிவித்தார். சிறப்பு விருந்தினர் முன்னாள் ஆளுநர், வட்டார ஒருங்கிணைப்பாளர் (ஆரோக்கியம் மற்றும் போலியோ ஒழிப்பு) Rtn. Dr. சகாதேவன், இந்தியாவில் போலியோ ஒழிந்துவிட்டாலும் அது வெளிஊடுருவல் மற்றும் மறுதாக்குதல் மூலம் தலைதூக்கும் என்ற எச்சரிக்கை உணர்வோடு ரோட்டரி உறுப்பினர்கள் போலியோவை உலகிலிருந்து முற்றிலும் ஒழிக்கும் நோக்குடன் தொண்டாற்ற வேண்டும் எனக்கூறி, End Polio Now திட்டத்திற்காக ரூ. 1லட்சம் வழங்கிய 25 ரோட்டரி நன்கொடையாளர்களைக் கவுரவித்தார்.

தொற்றாநோய் பற்றிச் சிறப்புரையாற்றிய Rtn. PDG A. ஜமீர் பாஷா Rotary India Health Mission (RIHM) திட்டத்தின்படி நோய் தடுத்தல் மற்றும் நோய் குணமாக்குதல் பற்றிய வழிமுறைகளைப் பற்றிச் சங்கங்களுக்கு விளக்கமளித்து இவற்றைச் செயல்படுத்துமாறு கூறினார்.




# POLIO WORKSHOP & NCD SEMINAR












தமிழ்நாடு அரசு மதுரை மண்டல மக்கள் நலவாழ்வுத் துறைத் துணை இயக்குனர் Dr. K.V. அர்ஜுன் குமார் போலியோ நோய் ஒழிப்பில் இந்திய மற்றும் தமிழக அரசுகள் மேற்கொண்ட தீவிர முயற்சிகளுக்கு பெரும் உதவியாக இருந்த ரோட்டரி அமைப்பைப் பாராட்டியதோடு தற்போது நீடித்துவரும் கொரோனா தொற்று ஒழிப்பில் ரோட்டரியின் பங்கிற்கும் நன்றி கூறினார். அவருக்கு மதுரை எலைட் ரோட்டரி சங்கத்தின் கௌரவ உறுப்பினர் அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

முன்னதாக நிகழ்வின் தலைவர் மதுரை எலைட் ரோட்டரி சங்க முன்னாள் தலைவர் Rtn. தினகரன் வரவேற்றார். நிறைவாக நிகழ்வின் செயலாளர் மதுரை எலைட் ரோட்டரி சங்க உடனடி முன்னாள் தலைவர் Rtn. K. லோகநாதன் வினோத் நன்றி கூறினார்.

# உலக சமாதானம்



சமாதானம் என்ற சொல் அமைதியைக் குறிப்பது. சமாதானத்தை விரும்பாத மானுடர் இல்லை , ஆனாலும் சமாதானத்தை முழுமையாக உணர்ந்தவரும் இவ்வுலகில் இல்லை. சமாதானம் என்பது ஏதோ இரு வேறுபட்ட கருத்துகள் கொண்ட நாடுகளுக்கிடையே அமைதியை உண்டாக்க முற்படுவது மட்டுமல்ல அதையும் தாண்டி மனித இனம் ஒற்றுமையுடனும், அன்புடனும் அனைத்து வளங்களையும் பகிர்ந்து வாழ்ந்து இயற்கையால் வரும் இடர்களைப் போக்கி ஒருவருக்கொருவர் ஒத்தும், உதவியும் வாழ்வதே சமாதானத்தின் முதல்படி.

இரு நாடுகளுக்கிடையே யுத்தங்கள் நிகழாமல் தடுப்பதும், பலநாட்டுத் தலைவர்களும் ஓரிடத்தில் ஒன்றுகூடிப் பேசி பிரச்சினைகளைக் களைய முற்படுவதுமே உலக சமாதானத்திற்கு வழிவகுக்காது. அணு ஆயுத உற்பத்தி மூலமோ, புதுப்புது ஆயுத கண்டுபிடிப்புகள், நவீன அறிவியல் தொழில்நுட்பக் கருவிகள் மூலமோ உலக சமாதானத்தை ஏற்படுத்திவிடவும் முடியாது.

1914–1918 வரை 4 ஆண்டுகள் நடந்த முதல் உலகப்போரில் சுமார் 16 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர். அதேபோல 1939–1945 வரையான ஆறு ஆண்டுகள் நடைபெற்ற இரண்டாம் உலகப்போரில் சுமார் 11 மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர். அது மட்டுமல்லாமல் ஜப்பான் ஹிரோஷிமா– நாகஷாகி நகர்கள் மீது நடத்தப்பட்ட அணு குண்டு தாக்குதல்களால் இன்று வரை அந்நாட்டு மக்களின் சந்ததிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.மேற்கண்ட இரு உலக மகாயுத்தத்தில் மனித இனம் ஓர் மிகப்பெரிய பேரழிவைச் சந்தித்தது. ஆனாலும் இன்று வரை பீரங்கிகள், துப்பாக்கிகள், வெடிகுண்டுகளின் சப்தம் உலகை விட்டு ஓய்ந்தபாடில்லை. உலகில் நிரந்தர சமாதானத்தை உருவாக்க யுனேஸ்கோ நிறுவனம் பொறுப்பேற்றது. ஏனெனில் உலகின் சகல முன்னேற்றத்திற்கும் அடிப்படை உலக சமாதானமே ஆகும்.

யுனேஸ்கோ முகவுரை வாசகமே ''மனித உள்ளங்களில் தான் முதலில் போர் தோன்றுகிறது, ஆதலால் மனித உள்ளங்களில் தான் முதலில் அமைதிக்கான அரண்களும் அமைக்கப் பெறல் வேண்டும்'' என்ற ஆணித்தனமான உண்மையை உரக்கக் கூறுகிறது.

அதாவது தனி மனித அமைதியே உலக அமைதிக்கு வித்து.

இதையே அருட் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் தனி மனிதனின் மனஅமைதி மூலமே குடும்பம், சுற்றம், ஊர், உலகம் அமைதி பெற முடியும் என்பதை உணர்ந்து தனிமனிதன் உடலால், உள்ளத்தால் அமைதி பெற மனவளக் கலையை வடிவமைத்தார். அதைத் தொடர்ந்து ''உலக சமாதான'' திட்டத்திற்கான வழிமுறைகளை வலியுறுத்தினார். அதாவது உலக மக்கள் இனம், மொழி, மதம், நிறம் பேதமின்றி தனி மனிதனின் அடிப்படை உரிமை, சுதந்திரம் பாதிக்கப்படாமல், அனைவர் வாழ்வும் மேம்பட கல்வி, அறிவியல், பண்பாடு, தொழில்நுட்பம் மூலமாக நாடுகளுக்கிடையே மட்டுமின்றி மனித இனம் அனைவரும் ஒற்றுமையாக ஒத்துழைப்பை நல்கி உலக சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும், நல்வாழ்விற்கும் பாடுபட வேண்டும்.

இயற்கை வள இன்பங்களைப் பகிர்ந்து, செயற்கையாய் துன்பத்தை ஏற்படுத்தாமல், இயற்கைச் சீற்றத்தால் பேரிடர் ஏற்படும் போது பாதிக்கப்பட்ட மக்களின் துன்பத்தைக் குறைக்க அனைவரும் முன் வர வேண்டும். நாடு, இனம், மதம், மொழி, நிறம் என பலதரப்பட்ட வேறுபாடுகளால் மனித இனம் பிளவுபட்டு, அத்துமீறி பல பாவச் செயல்கள் இழைக்கும் போது, இயற்கை அன்னை எரிமலையாய் வெடிக்கிறாள். உடலை சிலிர்த்து பூகம்பத்தை ஏற்படுத்துகிறாள், புயலால், மழையால், வெள்ளத்தால், சுனாமியால் எச்சரிக்கிறாள். 2020 ஆண்டில் கூட மானுடம் தன் மனிதத்தை உணர உயிர்க் கொல்லி நோயான கொரோனா வைரஸால் உலகையே உலுக்கினாள். இன்றுவரை அதற்கு முடிவு வந்த பாடில்லை. பேரிடர் காலங்களில் வேற்றுமை மறந்து ஒற்றுமையாய் வாழும் மனிதர்கள், இயற்கை தன் இயல்பு நிலை திரும்பியதும், மீண்டும் பிளவுபட்டு ஏற்றத் தாழ்வுகளுடன் வாழ்கின்றனர். இதுதான் உதட்டளவில் பேசப்படும் சமாதானத்தின் நிலை. உலகில் வாழும் ஒவ்வொருவரும் உள்ளத்தளவில் உலக அமைதியை, சமாதானத்தை விரும்புவராகவும், உலக சகோதரத்துவத்தைப் போற்றி நடப்பவராகவும் அவரது அறவாட்சித் தரம் அமைய வேண்டும்.

'வாழு, வாழ விடு' என்ற அடிப்படை கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும். தான் என்ன உரிமை, சுதந்திரத்துடன், நிம்மதியுடன் வாழ நினைக்கிறோமோ அதையே சக மனிதன் வாழவும் அனுமதிக்க வேண்டும். யாரையும் துன்புறுத்தாமலும், யாருடைய உரிமையை அபகரிக்காமலும் வாழ ஒவ்வொரு மனிதனும் முற்படும் போது அது நிச்சயம் உலக சமாதானத்தை, அமைதியை உருவாக்கும்.

இந்த உலகமென்பது ஓர் விருட்சமானால் நாம்


best

அனைவரும் பலதரப்பட்ட கிளைகளும், இலைகளும், காய்களும், கனிகளுமாக உள்ளோம். ஒரு மரத்தில் எத்தனை எத்தனை கிளைகள், இலைகள் !!!!

சில பசுமையானவை, சில வாடியவை, சில பெரியது, சில சிறியது, சில அழகானது, சில அழுகியது, சில முதிர்ந்த கனிகளைத் தருபவை, சில கனிகள் வெம்பியவை. ஆனால் அவை அனைத்தும் ஒரு வேரிலிருந்தே ஊட்டச்சத்தைப் பெறுகின்றன. ஊட்டச்சத்து மரம் முழுவதும் ஒரே சீராக பரவச் செய்தால் இவ்வேறுபாடு ஏற்பட வாய்ப்பில்லை. சூரிய ஒளி, நீர், சத்துக்கள் சரிவர கிடைக்காத பகுதிகள், பாதிக்கப்படுவதைப் போல உலகத்தில் மனித இனத்திலும் பொருளாதார ஏற்றத் தாழ்வே பெரும் பாவச் செயல்களுக்கு வழிவகுக்கிறது. இதில் யார் யாருக்கு எதிரி ? யார் யாருக்கு போட்டி ? இதில் ஓர் இலையை மற்றொரு இலைக்கோ, ஒரு கனியை மற்றொரு கனிக்கோ எதிரியாக திருப்பிவிடாமல் இருந்தால் உலக அமைதி உண்டாவது சாத்தியமே.

அன்பு ஒன்றே ஆதாரம். அன்பே அனைத்தும், அன்பு ஒன்றே உணவு, நீர், காற்று,ஒளியைவிட மேலானது. அன்பை மூச்சுக்காற்றாக, இயல்பாக சுவாசியுங்கள். அன்பு செய்வதை ஒரு வேலையாகவோ, கர்வமாகவோ நினைக்க வேண்டாம். அன்பு உங்கள் இயல்பாகட்டும். போரிட்டு பெறுகின்ற வெற்றியை விட போரிடாமல், அன்பால் பெறும் வெற்றி மிக உன்னதமானது. உலகம், முதலில் நம்மை அன்பு செய்ய ஆரம்பிக்கட்டும் என்றெண்ணாமல், நாமே நம்மைச் சுற்றி உள்ளவரிடம் குற்றம், குறை காணாது நேசிப்போம். அந்த நேசமே பின்னாளில் நமக்கான அங்கீகாரத்தை பெற்றுத்தரும்.

அதற்கான உதாரண சம்பவம்.

"முன்கை நீண்டால் முழங்கை நீளும்" என்ற வாக்கிற்கிணங்க உலக சகோதரத்துவத்திற்கும், உலக சமாதானத்திற்கும் நம் கைகளை முன் கையாக, முதல் கைகளாக ஒன்றிணைப்போம்.



அன்பை விதைத்து அன்பைப் பெருக்கி ஒருலக கூட்டாட்சி மலர்ந்து உலக சமாதானம் கனிய இன்றே நாம் நல் வித்திடுவோம்.

வாழ்க வையகம் !
வாழ்க வளமுடன் !

**Rtn. N. ARTHANARI**
Regional Coordinator
RC of Dindigul West

# Rotary ரோட்டரி 116வது ஆண்டு விழா

1905ம் ஆண்டு சிகாகோ நகரில் பால் ஹாரிஸ் அவர்களால் துவங்கப்பட்ட அமைப்பு தான் ரோட்டரியாக பின்னாளில் உருவானது. வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் இடையே நட்புறவை ஏற்படுத்துவதற்காகக் கூட்டப்பட்ட அமைப்பு பின்னர் சேவைக்காகவும், நட்புறவுக்காகவும் உலகளாவிய ரோட்டரி அமைப்பாக மாறுவதற்கு ஆணிவேராக இருந்தது.

தன்னலமற்ற சேவை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு மக்களுக்குத் தேவையான சேவைகளைத் தொடங்கி அந்தந்தப் பகுதி மக்களுக்கு சிறப்பாகச் சேவை செய்து வருவதாலேயே ரோட்டரி அமைப்பு இத்துனை ஆண்டுகளாக நிலைத்து நிற்கிறது.

ரோட்டரி நண்பர்கள் தன்னலமற்ற சேவை, நேர்மையான தொண்டு உணர்வு உண்மை வழியில் நடந்து நல்ல நட்புணர்வு, தொழில், வியாபாரம், முன்னேற்றத்திற்கு பாடுபடுவது. உலக அமைதிக்காகவும், சுகாதார மேன்மைக்காகவும், படிப்பையும் முன்னிறுத்தி வறுமையைப் போக்கி மற்றவர்களுக்கு சேவை செய்வதே நமது நோக்கமாகும்.

உலக நாடுகளில் போலியோவை அறவே ஒழித்தது ரோட்டரிதான் என்பதை நாம் நிரூபித்து காட்டுகிறோம். சமீபகாலத்தில் 2019ம் ஆண்டு கஜா புயலாகட்டும், 2020–21ல் கொரோனா தொற்றாகட்டும் ரோட்டரியின் சேவை அளப்பரியது. பன்னாட்டுத் தலைவர் "ரோட்டரி வாய்ப்புகளின் திறவுகோல்" என்றும், நமது ஆளுநர் "ரோட்டரி நண்பர்கள் இணைந்து சேவை செய்வதில் சிறந்து செயல்படுவோம்" (be excellent in service together - BEST) என்பதையும் நமக்கு தாரக மந்திரமாகக் கூறியிருக்கிறார்கள்.



ரோட்டரியின் 116ம் ஆண்டுவிழாவில் நாம் தொடர்ந்து சேவை செய்வோம் என்பதையும் ரோட்டரி அறக்கட்டளைக்கு வாரி வழங்குவோம் என்பதையும் உறுதி மொழியாக ஏற்றுக் கொள்வோம்.

"ஒன்றுபடுவோம் சேவை செய்வோம்".

**Rtn. SP. MUTHU**
District Treasurer, RC of Pudukkottai

# ENDPOLIONOW

### What is POLIO?

Polio or poliomyelitis is a disabling and life-threatening disease caused by the poliovirus. The virus spreads from person to person and can infect a person's spinal cord, causing paralysis (can't move parts of the body). Sometimes poliovirus is spread through saliva from an infected person or droplets expelled when an infected person sneezes or coughs. People become infected when they inhale airborne droplets or touch something contaminated with the infected saliva or droplets.

The virus may affect muscles on both sides of the body, but more often the paralysis is asymmetrical. Any limb or combination of limbs may be affected – one leg, one arm, or both legs and both arms. These nerve cells cannot regenerate, and the affected muscles lose their function due to a lack of nervous enervation - a condition known as acute flaccid paralysis (AFP). Typically, in patients with poliomyelitis muscles of the legs are affected more often than the arm muscles. Transmitted primarily via feces but also through airborne droplets from person to person, polio took six to 20 days to incubate and remained contagious for up to two weeks after.

### Rotary's role in eradicating Polio:

Rotary has been working to eradicate polio for more than 35 years. Our goal of ridding the world of this disease is closer than ever. As a founding partner of the Global Polio Eradication Initiative, we've reduced polio cases by 99.9 percent since our first project to vaccinate children in the Philippines in 1979.

Rotary launched PolioPlus in 1985 and was a founding member of the Global Polio Eradication Initiative in 1988. Through decades of commitment and work by Rotary and our partners, more than 2.5 billion children have received the oral polio vaccine.

Rotary members have contributed more than $2.1 billion and countless volunteer hours to protect nearly 3 billion children in 122 countries from this paralyzing disease. Rotary's advocacy efforts have played a role in decisions by governments to contribute more than $10 billion to the effort.

Today, polio remains endemic only in Afghanistan and Pakistan. But it's crucial to continue working to keep other countries polio-free. If all eradication efforts stopped today, within 10 years, polio could paralyze as many as 200,000 children each year.



**Rtn. JAKKAPPAN PALANIVEL,**
Rotary Club of Madurai Elite



# PRESIDENT AND SECRETARY REVIEW MEETING



நமது மாவட்ட ரோட்டரி சங்கத் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் சந்திப்பு ஜனவரி 2ம் தேதி மாலை 5.00 மணியளவில் மதுரையில் நடைபெற்றது. நிகழ்ச்சியைத் துவக்கிவைத்துப் பேசிய ஆளுநர் Rtn. A.L. சொக்கலிங்கம், முதல் ஆறுமாதகாலம் ஊரடங்குத் தாக்கம் இருந்தபோதும் காணொளி வாயிலாகக் கூட்டங்கள் நடத்தியும், கொரோனா தடுப்புக்காகப் பாதுகாப்பான முறையில் பல சேவைகளைச் செய்தும் ரோட்டரிக்குப் பெருமை சேர்த்த சங்கங்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தார். முதல் ஆறு மாதகாலச் செயல்பாடுகளைத் திறனாய்வு செய்யவும் வரும் ஆறு மாதங்கள் இன்னும் முனைப்புடன் செயல்பட வேண்டுவதற்கான திட்டமிடல் பற்றியும் கூடியுள்ளோம் என்பதை நினைவுப்படுத்தினார்.

மாவட்டப் பொதுச் செயலாளர் Rtn. K. கான் அப்துல் கபார்கான் நிகழ்வின் நோக்கம் பற்றி எடுத்துரைத்தார். மாவட்ட இணைச் செயலாளர் Rtn. காசிராஜன், ஆளுநர் அலுவல் நிமித்த வருகைக் கூட்டங்கள் நடத்தும்போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை எடுத்துரைத்தார். சிறப்புத்திட்டங்கள் மாவட்டச் செயலாளர் சிறப்புத்திட்டங்கள் Rtn. RBS. சுப்பிரமணி இந்திய ரோட்டரி வலைத்தளத்தில் அனைத்துச் சங்கங்களும், உறுப்பினர்களும் பார்வையிடுவதற்கும், பதிவேற்றுவதற்குமான வழிமுறைகளை விளக்கிக் கூறினார். ரோட்டரி அறக்கட்டளை மாவட்டச் செயலாளர் Rtn. R. ராஜா கோவிந்தசாமி, ரோட்டரி அறக்கட்டளையின் செம்மாந்த சேவையின் அங்கீகாரங்களைக் குறிப்பிட்டு, ரோட்டரி அறக்கட்டளைக்கு மேலும் நன்கொடை அளிக்கும் வகைகளைப் பற்றி விளக்கினார். நிறைவாக முன்னாள் ஆளுநர் PDG Rtn. Y. குமணன் ''நம்மால் முடியும்'' என்ற தலைப்பில் தலைவர்கள், செயலாளார்கள், மண்டலப் பொறுப்பாளர்கள் அனைவருடன் கலந்துரையாடி அவர்கள் அனைவரையும் உற்சாகப்படுத்தினார். முன்னதாக மாவட்டச் செயலாளர் Rtn. RM. அருணாச்சலம் வரவேற்றார். முடிவில் மாவட்டப் பொருளாளர் Rtn. SP. முத்து நன்றி கூறினார்.

மிகச்சிறந்த விருந்தோம்பலில் நாள் முழுவதும் திளைக்கவைத்த மதுரை எலைட் ரோட்டரி சங்கத்தலைவர் Rtn. S. சரவணமுத்து, செயலாளர் Rtn. R. மாதவன் பிரபு, நிகழ்வின் தலைவர் Rtn. S. தினகரன், நிகழ்வின் செயலாளர் Rtn. லோகநாதன் வினோத் மற்றும் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் சிறப்புப் பாராட்டுக்கள்.

# GOVERNOR'S OFFICIAL VISIT

## MADURAI GEMS



## MADURAI BLOSSOM




## PUDUKKOTTAI CITY



## MADURAI SOUTH




## MADURAI METRO HERITAGE




## MADURAI MEENAKSHI



## MADURAI INNOVATORS




## MADURAI DOWN TOWN



# GOVERNOR'S OFFICIAL VISIT

## TIRUCHIRAPALLI SHAKTHI



## TRICHY KINGS & TIRUVERUMPUR BARATH




## THENI STARS



## PUDUKKOTTAI CROWN CITY



## KARUR ANGELS




## KARUR CENTRAL



## KARUR



## KARUR TEXCITY



# NEW YEAR AND PONGAL CELEBRATION



TRICHY GEMS INNOVATORS



TIRUCHIRAPALLI SHAKTHI



THURAIYUR



PUDUKKOTTAI CITY



GUDALUR GARDEN CITY



PUDUKKOTTAI MAHARANI

**UPCOMING EVENTS**

கூடல்
KOODAL DISTRICT CONFERENCE
29, 30, May 2021

| திட்டங்கள் |
| --- |
| February 6th, 2021<br>ரோட்டரித் தகவல் பலகை |
| February 20th, 2021<br>சாலை விதிகள் விழிப்புணர்வு |

# ரோட்டரி தகவல் பலகை

- தகவல் பலகை அமைப்பதற்கான இடத்தைத் தேர்வு செய்தல்
- பலகை தயாரிப்புக்கு நல்ல தரமான பொருளைத் தேர்ந்தெடுத்தல்
- பலகையில் இடம்பெறும் தகவல்களுக்கு முன்அனுமதி பெறுதல்
- தகவல் பலகை அமைப்பதற்கான உகந்த இடங்கள்
- பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்கள்
- இன்ட்ராக்ட் கிளப் பள்ளிகள்
- ரோட்ட்ராக்ட் கிளப் கல்லூரிகள்
- தகவல் பலகை நிரந்தரமாக நிர்மாணித்தல்
- பொதுமக்கள் பார்வையில் இருக்குமாறு அமைத்தல்
- தகவல் பலகை போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத இடத்தில் அமைத்தல்
- தகவல் பலகை திறப்பு விழா
- ரோட்டரி மாவட்டப் பொறுப்பாளர்களை அழைத்தல்
- மண்டல ஒருங்கிணைப்பாளர், துணை ஆளுநர், மற்றும் அனைத்து ஊடக நிருபர்களை அழைத்தல்
- ஆவணப்படுத்துதல்
- Rotary.org இணையதளத்தில் பதிவேற்றல்



best

# Club Activities - January



**Pudukkottai City :** மாற்றுத் திறனாளி ஒருவருக்கு உபகரணங்கள் வழங்குதல் **- Jan 01**




**Dindigul Mid-Town :** கிரிக்கெட் போட்டி **- Jan 05**




**Madurai Elite :** முதியோர்க்கு தேவையான பொது மற்றும் அவசரகால மருந்துகள் வழங்கும் திட்டம் **- Jan 06**



**Kodaikanal : Governor's Visit to Happy School - Jan 08**




**Madurai West : Vocational Training - Free soap making class - Jan 09**



**Thuraiyur : 50 saplings were planted and over 500 saplings supplied at Kathamboor, Thuraiyur - Jan 10**




**Tiruchirapalli Shakthi : Mega Blood donation Camp at Doctors' Blood Bank and Research Centre - Jan 10**



**Theni Metro Kings : Donated 40 pairs of shoes to girl athletes at the Government Higher Secondary School - Jan 10**

# Club Activities - January



Dindigul West : Financial Assistance of Rs.87000. to S.Daniel, a 19 year old boy for Kidney Transplant - Jan 12



Tiruchirapalli Rockcity : Donated Dress materials and Health materials to 120 inmates of Kangaroo Karunai Illam for Special People, Trichy, as mark of Pongal Celebrations - Jan 15



Pudukkottai : புதுக்கோட்டை ரோட்டரி சங்கமும் கரீம் ஹாஜியார் குடும்பத்தினரும் இணைந்து நடத்திய 13 ஜோடிகளுக்கு இலவச திருமண வைபவம் – Jan 17

## ROTARACT CLUB ACTIVITIES



Rotaract Club of Southern Fort



Releasing the next year logo and team introduction



Rotaract Club of Pudukkottai



Rotaract Club of Solamalai College of Engineering and Solamalai Polytechnic College.






For placing an advt, kindly contact gmlrid3000@gmail.com

# கொடுத்துச் சிவந்த கரங்கள்

## Major Donors

| Major Donor Level 1 | |
|---|---|
| Rtn. M. Mani | Jambukeshwaram |
| Rtn. A. Leo Felix Louis | Pudukkottai Crown City |
| Rtn. Vora G. Lalji and Mrs. Vora Sarala | Madurai West |
| Rtn. E. R. Kumaresan and Mrs. E. K. Chandrakala Kumaresan | Madurai |
| Rtn. R. Kumaran | Dindigul West |
| Rtn. K. R. Suresh Kumar | Tiruchirapalli Diamond City |
| PDG. Rtn. Y. Kumanan and Mrs. Delphinerose Kumanan | Madurai Central |
| Rtn. Somasundaram Krishnamurthy | Trichy Kings |
| Rtn. A. Koteswaran | Madurai Gems |
| Rtn. Mahesh Kumar Nandlal Khanna and Mrs. Shanu M. Khanna | Tiruchirapalli Rockcity |
| Rtn. K. Khan Abdul Gafar Khan | Pudukkottai King Town |
| Rtn. P. Kesavan | Dindigul West |
| Rtn. S. Kathiresan | Pudukkottai Central |
| Rtn. P Karuppaiah | Pudukkottai |
| Rtn. Baskarapandian Karumalaipandian | Nilakottai Gems Golden City |
| Rtn. J. Karthik | Perambalur |
| Rtn. V. Karnan | Aranthangi |
| Rtn. P. Karmegamani | Madurai |
| Rtn. H. Kannan | Madurai Star |
| Rtn. N. Er. Kanagarajan | Pudukkottai |
| Rtn. Dr. Mathuranthakie Kaliyamoorthy | Pudukkottai Crown City |
| Rtn. B. Kalidasan | Madurai South |
| Rtn. Dr. P. Kalaiarasan | Manapparai West |
| Rtn. Chellamuthu Jeyapaul | Madurai Star |
| Rtn. K. N. Jayaraman | Perambalur |
| Rtn. N. Jayapalan and Mrs. Jayapalan Sellam | Karur |
| Rtn. G. Jayagopalan and Mrs. Parvatha Varthini | Chinnamanur |
| Rtn. Dr. Jayson Keerthy Jayabarathan | Pudukkottai Central |
| Rtn. M. K. Jawahar Baapu and Mrs. Nandini Jawahar Baapu | Madurai |
| Rtn. D. John Jainus | Tiruchirapalli |
| PDG. Rtn. P Jagannathan and Rtn. Meenakshi Jagannathan | Theni & Theni Stars |
| Rtn. P. M. Imayapathi | Madurai Star |
| Rtn. J. S. Hariram | Madurai |
| Rtn. Dr. R. Gurusundar and N. Sundari | Madurai Meenakshi |
| Rtn. Bata G. Gopalakrishnan | Tiruchirapalli |

** List continues in the next issues

For private circulation only

Published by
Rtn. A.L. Chokkalingam,
District Governor,
No 79, Kambar Street, Charles Nagar,
Pudukkottai,
Tamil Nadu - 622 001

Kindly send articles, news of events and projects with a brief writeup and good resolution photographs for publication to gmlrid3000@gmail.com before the end of each month.

Printed by Sree Vinayaga Screens, S.S. Colony, Madurai - 625 010
Ph. : 0452-2600300, 999 444 6030